# சென்னை கந்தகோட்டம்

# அருள்மிகு முத்துக்குமாரசுவாமி

# ஆற்றுப்படை

ஆசிரியர் கவியோகி

முனைவர் பி.பாண்டியன் இ.ஆ.ப (ஓய்வு)

Copyright © Pichai Pillai Pandian
Chellam Publishing House
3/4 Baskara Street
Rangapurajapuram, Chennai, 600 024, India
www.kaviyogii.com

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the author, except for the use of brief quotations in book reviews. For personal use only. Not for resale or distribution.

# சென்னை கந்தகோட்டம்

# அருள்மிகு முத்துக்குமாரசுவாமி ஆற்றுப்படை

## நூல் விவரம்


நூலின் பெயர் : சென்னை கந்தகோட்டம்
அருள்மிகு முத்துக்குமாரசுவாமி ஆற்றுப்படை

ஆசிரியர் : கவியோகி முனைவர் பி.பாண்டியன் இ.ஆ.ப (ஓய்வு)

மொழி : தமிழ்

நூல் உரிமை : ஆசிரியர்க்கே

பதிப்பு ஆண்டு : முதற்பதிப்பு அக்டோபர் 2002

பக்கங்கள் : 16

நூல் அளவு : கிரவுன்

எழுத்து : 11 புள்ளிகள்

தாள் : 11.6 வெள்ளைத்தாள்

அச்சிட்டோர் : சன் ஆப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை - 600 024.

வெளியிடுவோர்

செல்லம் பதிப்பகம்
¾ பாசுகரா தெரு,
அரங்கராசபுரம், சென்னை - 600 024.
தொ.பே : 4845 985

**நிகரி** (Fax): 4833821
**மின் அஞ்சல்** : kaviyogii@eth.net
Website http: www.kaviyogii.com

**விலை ரூ.**11.00/-

## ஆற்றுப்படை நூல் அறிமுகம்

**கு.பாலசுப்பிரஅணியன் க.மு.**

சங்கத் தமிழில் வள்ளல்களை நாடிச் செல்லும் புலவர்கள், பெரும் பரிசில் பெற்று வருங்கால், எதிரே வறியநிலையில் உதவி வழங்கும் புரவலரைத் தேடிவரும் புலவனைக் கண்டு, அந்த வள்ளலின் பால் ஆற்றுப்படுத்தும் வலையில் சங்கப் புலவர்கள் பாடிய பாடல்கள் நிரம்ப உள்ளன். பாடல் திணையில் ஆற்றுப்படைத் துறையில் வரும் பாடல்களை புறநானூற்றில் நாம் காண முடிகிறது.

பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை ஆகிய நூல்கள் பாண்ரை வள்ளல்பால் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தவை. பத்துப்பாட்டின் முதற்பாட்டு திருமுருகாற்றுப்படை என்பதைத் தமிழுலகம் நன்கு அறியும். முருகனின் ஆறுபடை வீடுகளையும் அவன் வெற்றிச் சிறப்பையும் அடியார்க்கு திருஅருள் வழங்கும் திறத்தையும் நக்கீரதேவர் இனியதமிழில் “உலகம் உவப்ப வலன் ஏற்பு திரிதரு” எனத்தொடங்கும் 280 அடிகள் உடைய நெடிய அகவற்பாட்டில் பாடியுள்ளர்.

கவியோகி **பேகன்** அவர்கள் பாடியுள்ள **முத்துக்குமாரசுவாமி ஆற்றுப்படை** தமிழ்மணமும் பக்தி மணமும் ஒருங்கே கூடிய இனிய பதிகமாம். இதனால் நாளும் பாடிப் பரவுதலால் விளையும் நன்மை 11 ஆம் பாடல் ஆகிய நூற்பயனால் தெளிவுறும்.

இந்நூலை வாங்கி நாளும் ஓதி முருகன் திருவருள் பெற்று உய்க.

ஓம் கு.பாலசுப்பிரமணியன்
(கவிஞர் கானவன்)

**பரிசில் வேண்டும் புலவர் ஒருவர்**
**வள்ளலை நாடிச் எல்லும் போழ்து**
**அவ்வள்ளலிடம் பரிசில் பெற்றுத் திரும்புகிற**
**புலவரிப் பார்த்து, அவரே அவ்வள்ளல்**
**எனக்கருதிப் பாடுகிறார்.**

1

உலகெலாம் உவந்துபுகழ் ஓங்குமுக விலாசரே!
உயிரெலாம் மகிழ அன்பே
ஒழுகுகுண சீலரே! உயர்செல்வம் அனைத்துடையீர்
உதவுகொடைச் செல்வ ரேறே!

கலையெல்லாம் உடலெடுத் தன்னதோர் கவின்மிகும்
கண்களில் ஒளிகொள் தேவே!
காலத்தை வென்ற சொல் ஞாலத்தை அளந்தநடை
கனகமணிக் குன்றுத் தோளா!

விலையுயர் மாணிக்க வைரவை டூரியங்கள்
விரிகதிர் அணிக லன்கள்
மேல்விளங்கும் கதிர்மதிபோல் மேனியில் விளங்குவதால்
விண்ணிவர் தலைவா நீயோ?

மலைமகளும் அலைமகளும் கலைமகளும் வாசஞ்செய்
வாடாத முகவி லாச
வாடியுனை நாடிவந்த கவிஎனக்குப் பரிசில்கள்
வழங்கியருள் வள்ளல் நீயே!

**அருள்மிகு முத்துக்குமாரசுவாமியிடம் பரிசில்கள் பெற்று வந்த கவிஞர், பரிசில் கடாவும் புலவரை ஆற்றுப் படுத்திப் பாடியது.**

**2**

"திருமலியும் சென்னைக்கு வருகைபுரி கவிஞரே
செப்பினேன் வணக்கம் ஏற்பீர்!
செந்தமிழ்ச் சொல்லெடுத்துச் சந்தமிகும் கவிமாலை
செய்கவிஞர் இனத்த வன்யான்!

இருவரும் ஓரினம்! எனைச்சுற்றி யுள்ளசெல்வம்
யான்பெற்ற பரிசில் கண்டாய்!
ஈசர்மகிழ் அருள்முத்துக் குமாரசாமி என்கவிக்கா
எனக்களித்த கொடையா கும்காண்!

வருகைபுரி பாவலர்கட் கடையாத சந்நிதி
வற்றாத அருட்சா கரம்!
வாகான ஈராறு தோள்களும் நமைப்போன்றார்
வடித்தகவி தமைச்சு மக்கும்

திருப்போர்க்குத் தலைமைதாங்கி தேவர்க்கு வெற்றிதந்த
அருள்முத்துக் குமார சாமி
சென்னையில் கந்தகோட்டம் அமைத்தர சாள்கிறார்
சென்றுநீ காண்மின் இன்றே!"

## 3

” நம்பிக்கை மோசம்செய் நயவஞ்ச வடிவின
நரிகளிடைச் சிக்குண் டாயோ?
நானிலத்தில் பாடுபட்டு சேர்த்திட்ட நாணயத்தை
நண்பிலா கவர்செய் தாரோ..?

வம்புக்கு வழக்கிட்டு வற்றாத செல்வங்கள்
வற்றச்செய் திட்டார் கொலோ?
வாதுகள் புரிந்துன்றன் மீதுறு வளமெல்லாம்
வளைத்துக்கொண் டார்தம் கொல்லோ?

செப்புக்கா சுக்கும் உபயோக மில்லாத
செய்கையால் உலகை ஏய்ப்போர்
செப்படி வித்தைகளால் மயக்குண்டு வண்பொருளைத்
தீயவர்க் களித்திட் டாயோ?

அம்மையப்பர் அரியமகன் முத்துக் குமாரசாமி
அருள்நிதி கடாட்ச முண்டால்!
ஆற்றுப் படுத்தினன் அற்புதப் பாப்புனைந்தே
அரும்பரிசு பெறுக மாதோ

## 4

செல்லுகிற வழி எதுவோ? எனும் கேள்வி யுன்கண்ணில்
தெரிகிறது கூறு வேன்கேள்!
சென்னையும் பதியினிலே திகழ்வங்கக் கடல் அண்மை
செல்வப்பூங் காந கர்க்கண்

எல்லையிலாப் புகழ் கொண்ட ஈராறு புயத்தழகன்
என்கவிகட் கருளும் வள்ளல்
எழுநிலைக் கோபுரம் எழுந்துவிண் தனைவருட
இருந்தனன் கோயில் கொண்டே.....!

அல்லலெலாம் அகன்றுவிடும் அழகுகோ புரம்கண்டால்
ஆனந்தக் கூத்தா டுவாய்!
அச்சமிடுவாய் எதற்கப்ப? ஆறுமுகக் கடவுளருள்
அமுதமழை முகில் தேகாண்!

எல்லையிலாப் பரம்பொருள்நும் ஈனத்தை மாற்றிட்வே
இரங்கியுருத் தாங்கி வந்தார்!
ஈசர்க்கும் குருவான இறைவர்முத்துக் குமாரசாமி
எழில்மிகும் வடிவம் காணே!”

# 5

# பாசில் கடாவுவோன்

’அஞ்சுக்கும் பத்துக்கும் ஆசையால் அவசரத்தால்
அறிவில்லா மூடர் தம்மை
‘அறிஞரே எனப்புகழ்ந்து பாடினேன் அழகிலானை
அழக! எனப் புனைந்து சொன்னேன்!

கஞ்சத்தன் தனைவள்ளல்! காவியத் தலைவஎன்றேன்!
காட்டு மிராண்டி தன்னை
கலைப்புலியே என்றேன்! அக் கருணையில் காவலனை
கருணையில் வானே! என்றேன்!

பஞ்சமா பாதகமென் றஞ்சுமிச் செயல்களால்
பராமரிப்ப தோகு டும்பம்?
பாடல்கள் ஆயிரமாய்ப் பாடிடினும் அவற்றினைப்
பதிப்பிக்க வருவா ரில்லை

கொஞ்சமோ கவிதை காற்றிலே கரைந்தன?
கூறுமொரு வழியைக் காணேன்!
கூத்தரசன் மகன்முன்னே பாடவே ஆசுகவி
கொண்டுவந்தேன் செவிசாய்ப் பனோ?

## 6

## ஆற்றுப் படுத்துவோன்

”அள்ளஅள்ளக் குறையாத அருஞ்செல்வம் பற்பலவும்
அருள்குவன் ஐயம் வேண்டாம்!
அரும்பெரும் கல்வியும் நீடித்த ஆயுளும்
அழகிய இளமை வளமும்

பள்ளத்தே பாய்புனல்போல் பல்துறையும் செல்திறமும்
பாவமிலாத் தொழில்செய் பேறும்
பாவத்துக் கஞ்சமனம் ஆபத்துக் குதவுகுணம்
பரந்தவுளம் சிறந்த ஆற்றல்

கள்ளமிலா நண்பர் தம் காதல்சேர் குழாங்களும்
களங்கமில் வாழ்க்கைத் துணையும்
கபடமிலாக் கூட்டமும் களவகன்ற நாட்டமும்
கண்ணியத் தேட்டம் தானும்

உள்ளதை உள்ளபடி அறிகின்ற ஓர் அறிவும்
உலகத்தின் உயர்ந்த நோக்கும்
உனக்கருள் செய்குவான் ஓம்முத்துக் குமாரசாமி
உவகையுடன் கோயில் செல்வீர்!

## 7

தத்துவத் தரிசனம் தான்காண வியலாத
சகசமலத் திரையை நீக்கி
சாலோக சாமீப சாரூப சாயுச்யச்
சந்தானம் தருவான் காணே!

வித்தையில் உயர்வித்தை விந்துசயம் எனுமுண்மை
விளங்கிடநீ அறியு மாறு
வேதத்தின் சாரத்தை விநயமாய்க் காட்டுவான்
விளக்கமுறும் ஐய மெல்லாம்

சித்தர்கள் திருவுளக் கோயில்கொள் திருக்குமரன்
தேர்ந்தனனுன் உள்ளம் தேராய்!
திரிகாலம் தெரிகின்ற திறத்தையும் உனக்கருளிச்
சித்தர்தம் குழாத்துள்ச் சேர்ப்பான்!

முத்துக் குமாரசாமி முழுப்புகழும் சொல்லுதற்கு
மொழியுண்டோ அறிக மாதோ!
முத்துமுத் தாகப்பல முத்தமிழ்க் காவியங்கள்
மொழிக்கவி மழையும் நீயே!

## 8

பக்திமார்க்க மேயொழுகி முக்திபெற்ற பரம்பரைகள்
பற்பலவாம் அவற்றுள் பண்பு,
பரிணமிக்கும் செட்டிகுலம் பலவுள்ளும் பேரிச்செட்டி
பண்பாளர் மரபில் வந்தோர்

சித்தர்க ளேபோல்வர்! திருக்கோவில் முகப்பினில்
சிரித்தமுகாம் பொலிய நின்று
செழியதமிழ்க் கவிஏறே! வருகவென வரவேற்றுன்
சிந்தையை குளிர்விப் பார்கள்!

சக்திமைந்தன் மேல்கவிதை சரமழைபோல் பொழிகின்ற
தமிழ்க்கவியே வருக! உன்றன்
சஞ்சலங்கல் யாவையும் தீர்த்தருள் பாலிக்க
சுவாமியுனை எதிர்பார்க் கின்றார்!

தித்திக்கும் தமிழமுதம் கேட்டு மகிழ் அன்பர்கள்
கேண்மையொடு காத்தங் குள்ளார்
செழிய தமிழ் மழையமுதில் முழுதும் நனைந்
தேமகிழ்வோம்
எனச் செப்பி உனைஅ ழைப்பார்!

# 9

வரவேற்கும் முகப்பினிலே மயில்வா கனரையே
வணங்கிஅவர் வலது காதில்
வந்த உன் சேதியையும் வேண்டுகிற வரங்களையும்
வகைப்படுத்தி விண்ணப் பித்து

பரப்பிரம்ம சொரூபியின் அருல் ஒழுகும் சந்நிதிக்கு
பாவலனே பணிந்து செல்க!
பழமறைகள் தேடுகின்ற விழுமிய சடாக்கரத்தை
பாடிக்கொண் டேம னத்தே!

இருமருங்கும் சந்திரரும் சூரியரும் நடுவக்னி
இருந்துனக் கன்பு செய்வார்!
அருவமாய் அந்தந்தக் கலைநிற்கும் யோகியர்கல்
ஆசிகள் புரிகு வாரால்!

திரிமூர்த்தி தம்தேவி மார்கலுடன் நவகோல்கல்
பரிவாரத் தேவ தைகள்
அருள்முத்துக் குமாரசாமி தனைக்காண வந்துள்ளார்
அண்டமெல்லாம் இங்கே காண்பாய்

## 10

சத்தான பொருளையும் சித்துளதாம் உண்மையும்
சலிப்பிலா னந்தம் தானும்,
சகல உயிர் தேடுமச் சுகக்கடல் பெருநிதியும்
தருகுவன் ஆவல் தீர

எத்துணையோ யுகாதியுகம் பிறவியில் நீ தேடியதை
ஈவார்! உன் மிடிமை நீங்க!
என்ன தவம் இயற்றினையோ இன்கவி நீ
இங்குவர
ஈசுவரர் அருளைப் பெற்றாய்!

சித்தர்தம் குழாத்துடன் சேர்த்தருள் வாருன்னை
செய்திஇதன் மேலும் உண்டோ?
சிவசக்தி முத்துக் குமாரசாமி மந்திர
தீக்கையும் செய்து வைப்பார்

தித்திக்கும் முத்தமிழால் எத்திக்கும் நத்திக்கும்
புத்திக்குள் முத்தும் தேனை
தித்தித்தோம் சித்தித்தோம் பத்தித்தேன் பருகியே
செந்தமிழ்ப்பா பாடு வீரே!

## 11

## நூற்பயன்

சீரலைவாய் பரங்குன்றம் பழுமுதிர்ச் சோலைத்திரு
ஆவினன் குடி மேலும்
சுவாமிமலை திருத்தணிகை கோலோச்சும்
காட்சிகள் உன்
சுகானு பூதிக் கருள்வான்

பாரிலுன் வாழ்வுயர வேண்டுகிற அத்துணையும்
பரிசிலா இறைவன் ஈவான்!
பாவலனே! உனக்காகி வழங்கிட ஐங்கரரும்
பரிந்துனக் காகச் சொல்வார்!

ஓர்பிரம்மம் உருவு கொண்டே இருமங்கையர்சூழ்ந்தோன்
உயர்தமிழ்க் காவ லன்காண்
ஓர்நான் மறைப்பொருளன் ஐந்தலைச் சிவன்பெற்ற
ஆறுமுகத் தீசன் கண்டாய்!

வாருமையா கவிஞரே என்றுவர வேற்றுனக்கு
வழங்குவான் பரிசில் யாவும்
வாட்டமெலாம் தவிர்த்தனை வாழ்வின் பொருள்
கண்டனை
வாழிகவி செல்லு வாயே!

முற்றும்

## கவியோகியின் நூல்கள்

## திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகள்

**154, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை -18.**

---

(1) தமிழ்த்தாய் பிள்ளைத் தமிழ்
(2) கவிஞர் பேகன் கவிதைகள் (கவிதைத் தொகுப்பு)
(3) சிவயோக சீர்த்தி
(4) வானில் உலவும் ஆலமரம்
(5) தமிழ்க் கீதாஞ்சலி (தாகூர்)
(6) திருவேல் உலா
(7) அருள்மிகு கணேசர் அந்தாதி
(8) திரு. அங்கயற்கண் அம்மை அந்தாதி
(9) காதல் பரிசு (தாகூர்)
(10)முருகு ஆயிரம்
(11)Yoga or Universe (a Long Poem)
(12)Avvai Kural
(13)Yoga in Poetry
(14)Manimekalai - English (Full Epic)
(15)Valayapati & Kuntalakeci
(16)Love in the Wooded Hill slope
(17)Epic of the Eternal Mother
(18)Kugagnana Bodham
(19)செண்பகவல்லியம்மன் கட்டளை அந்தாதி - செல்லம் வெளியீட்டகம்
(20)ஓங்காரத் திருநூற்றந்தாதி
(21)திருக்குறள் இசையமுதம்
(22)Paripatal
(23)திருக்கை வழக்கம்
(24)பாவிடுதூது
(25)சீலக்காரி அம்மன் கும்மி

(26)Gathered Gems Tamil short stories in English Anna & Tennarasu Kural Peetam, Govt. of Tamilnadu (40) Bharathi on Guru Gobind Singh - in English (Developers India)

## அச்சில் உள்ளவை

(27)விநாயகர் அந்தாதி
(28)திருமுருகன் அந்தாதி
(29)அதியமான் நெடுமான் அஞ்சி
(30)பாரி வளர்த்த பறம்பு (காவியங்கள்)
(31)அழகு ஆயிரம்
(32)அறிவு ஆயிரம்
(33)செறிவு ஆயிரம்
(34)கண்ணா கண்ணா
(35)நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் (நாடகம்)
(36)Yoga for one & all
(37)சித்தர் தமிழ்
(38)Epic of the Eternal Mother

## RESEARCH ON THIRUKURAL

(41) Anatomy of Enemy
(42) Dicotomy of a Friend

## CASSETTES & CD'S

**RPG THE GRAMAPHONE COMPANY OF INDIA LTD.,**

**33, JESSORE ROAD, DUM DUM, CALCUTTA - 28**

(43) குங்கும நாயகி - முதலாம், 2ம் பகுதி பாடியவர்
திருமதி. வாணி ஜெயராம்
(44) விநாயகர் துதியமுது - பாடியவர் டாக்டர்.பாலமுருளிகிருஷ்ணா
(45) சபரித் தேனிசை - பாடியவர் டாக்டர். வீரமணி
(46) திருக்குறள் இசையமுதம் (க) அறம் - பாடியவர்கள் பாரதி - பிரேமா
(47) தேவி வந்தனம் - பாடியவர் திருமதி. சுசீலா
(48) அருள்தரும் அனுமான் - பாடியவர் ஜானகி

(49) மதுரை மீனாட்சி - பாடியவர் பம்பாய் சகோதரிகள்

(50) வேத முதல்வி - பாடியவர்கள் சீர்காழி சிவசிதம்பரம்,
நித்தியஸ்ரீ, மகாராஜன், உஷாராணி, பிரபாகர்